# பொங்கல் தொகுப்பு வழங்கும் பணி: நியாய விலைக் கடைகளில் ஸ்டாலின் ஆய்வு

சென்னை, ஜன. 11–

நியாய விலைக் கடைகளில் சிறப்பு பொங்கல் தொகுப்பு பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பணியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள பொங்கல் பரிசுத் தொகுப்பு திட்டத்தைப் பற்றிச் சிலர் தவறான விஷமத்தனமான கருத்துக்களைப் பரப்பி வருவதால், இப்பணிகள் முறையாக நடைபெற்று வருவதையும், தரமான பொருட்கள் எவ்விதப் புகார்களும் இன்றி அனைவருக்கும் கிடைக்கப் பெறுவதை உறுதிசெய்திடவும், நியாயவிலைக் கடைகளில் பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கும் பணிகளை, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அனைவரும் தொடர்ந்து கண்காணித்து அனைவருக்கும் தரமான பொங்கல் பரிசுப் பொருள்கள் கிடைப்பதை உறுதிசெய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, முதலமைச்சர் நேற்று சென்னை, ராயபுரம், தொப்பை தெரு மற்றும் புது வண்ணாரப்பேட்டை, டாக்டர் விஜயராகவலு தெரு ஆகிய இடங்களிலுள்ள நியாய விலைக் கடைகளுக்கு நேரில் சென்று, சிறப்பு பொங்கல் தொகுப்பு பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கும் பணியினை ஆய்வு செய்தார்.



பின்னர், அங்குள்ள பொதுமக்களிடம், சமூக இடைவெளியை கடைப்பிடித்தும், முகக்கவசம் அணிந்தும், அரசின் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பொருட்களை பெற்றிட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.மூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் மழை காலத்தில் தடையற்ற மின்சாரம் கிடைக்க நவீன கருவிகள்

## செந்தில் பாலாஜி, உதயநிதி ஸ்டாலின் இயக்கி வைத்தனர்

சென்னை, ஜன.11

சென்னை சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் மழை காலத்தில் தடையற்ற மின்சாரம் கிடைப்பதற்கான நவீன கருவிகள் பயன்பாட்டை அமைச்சர் செந்தில்பாலாஜி, உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மழை காலங்களில் மின் விபத்தை தடுக்கவும், தடையற்ற மின்சாரத்தை வழங்கவும் மின் இணைப்பு பெட்டிகளை உயர்த்தும் பணி நடைபெற்று வருகிறது. அதே போன்று வளைய சுற்றுத்தர கருவி (ஆர்.எம்.யு.) நிறுவும் பணியும் தொடங்கி உள்ளது. இந்த கருவி இரு மின்வழி பாதைகளுடன் இணைக்கப்பட்டுள்ளதால் ஏதேனும் ஒரு மின்பாதையில் பழுது ஏற்பட்டாலும் மற்றொரு மின்வழி பாதை மூலம் மின்சாரத்தை வழங்க கூடியது.



மேலும் இந்த கருவியை மின்வாரிய தலைமை அலுவலகத்தில் இருந்தும் இயக்கலாம். இதன் மூலம் மின்சாரம் எடுத்து செல்லும் வயர்களில் பழுது ஏற்பட்டால் கூட உடனடியாக சரி செய்யும் வசதி கொண்டது.

இந்த நிலையில் சென்னை சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட வி.ஆர்.பிள்ளை தெரு, ஆலங்காத்தான் தெரு, தேவராஜ் முதலி தெரு, ஜான் ஜானி கான் 2 தெருக்கள், தலையாரி தெரு, தெற்கு கூவம் ரோடு, கஜா தெரு, எல்லப்பன் தெரு, சி.பி.எம். தெரு, காக்ஸ் கொயர், சுவாமி நாயக்கன் தெரு, லாக் நகர் 2 தெருக்கள், பார்த்தசாரதி தெரு ஆகிய பகுதிகளில் 15 புதிய வளைய சுற்றுத்தர அமைப்பு கருவிகள் நிறுவப்பட்டது.

இந்த கருவியை மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைக்கும் விழா, வி.ஆர். பிள்ளை தெருவில் நேற்று நடைபெற்றது.

விழாவில் மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி எம்.எல்.ஏ. உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தலைமையில் மத்திய சென்னை தொகுதி எம்.பி. தயாநிதி மாறன் முன்னிலையில் இந்த கருவிகள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர்–மேலாண்மை இயக்குனர் ராஜேஷ் லக்கானி, இயக்குனர் மா.சிவலிங்கராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் மொத்தம் 108 இடங்களில் இந்த கருவிகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரையில் 27 கருவிகள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக மின்சார வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் நேற்று 13 ஆயிரத்து 990 பேருக்கு கொரோனா

சென்னை, ஜன.11

தமிழகத்தில் நேற்று 13 ஆயிரத்து 990 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று புதிதாக 1 லட்சத்து 34 ஆயிரத்து 417 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 8,307 ஆண்கள், 5,683 பெண்கள் என மொத்தம் 13 ஆயிரத்து 990 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதில் அதிகபட்சமாக சென்னையில் 6,190 பேரும், செங்கல்பட்டில் 1,696 பேரும், திருவள்ளூரில் 1,054 பேரும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

குறைந்தபட்சமாக மயிலாடுதுறையில் 13 பேரும், அரியலூரில் 15 பேரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். தமிழகத்தில் நேற்று வெளிநாட்டில் இருந்து வந்த 4 பேருக்கும், வெளிமாநிலங்களில் இருந்து வந்த 28 பேருக்கும், 12 வயதுக்கு உட்பட்ட 413 குழந்தைகளுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 1,861 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.

அதிக ஆபத்தான மற்றும் அதிக ஆபத்து இல்லாத நாடுகளில் இருந்து இதுவரை தமிழகத்துக்கு வந்த 27 ஆயிரத்து 346 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டு உள்ளது. இவர்களில் 348 பேருக்கு இதுவரை கொரோனா உறுதி செய்யப்பட்டு, அதில் 207 பேருக்கு ஒமிக்ரான் அறிகுறி கண்டறியப்பட்டு உள்ளது. அந்தவகையில் தற்போது வரை 21 மாவட்டத்தில் 185 பேருக்கு ஒமிக்ரான் பாதிப்பு கண்டறியப்பட்டு உள்ளது. இதில் அனைவரும் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு உள்ளனர்.

## ஒரே நாளில் 20,765 பேருக்கு 'பூஸ்டர் டோஸ்' போடப்பட்டுள்ளது

தமிழகத்தில் இதுவரை 28 லட்சத்து 14 ஆயிரத்து 276 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது.

கொரோனாவுக்கு தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரியில் 8 பேரும், தனியார் ஆஸ்பத்திரியில் 3 பேரும் என 11 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்து உள்ளனர். 31 மாவட்டங்களில் உயிரிழப்பு இல்லை. தமிழகத்தில் இதுவரை மொத்தம் 36 ஆயிரத்து 866 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்து உள்ளனர். கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 2 ஆயிரத்து 547 பேர் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்டு உள்ளனர். இதுவரையில் 27 லட்சத்து 14 ஆயிரத்து 643 பேர் குணம் அடைந்து உள்ளனர். சிகிச்சையில் 62 ஆயிரத்து 767 பேர் உள்ளனர்.

தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் மட்டும் 20 ஆயிரத்து 765 பேருக்கு 'பூஸ்டர் டோஸ்' தடுப்பூசி போடப்பட்டுள்ளது என கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் 60 வயதை கடந்த முதியோர்களுக்கு வீடு தேடி பூஸ்டர் தடுப்பூசி

## ககன் தீப் சிங் பேடி அறிவிப்பு

சென்னை, ஜன.11

சென்னையில் 60 வயதை கடந்த முதியோர்களுக்கு வீடு தேடி வந்து தடுப்பூசி செலுத்தப்படும் என்று மாநகராட்சி கமிஷனர் ககன் தீப் சிங் பேடி அறிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன் தீப் சிங் பேடி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கொரோனா தொற்று பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ள தடுப்பூசி ஒன்றே சிறந்த தீர்வு என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனையின்படி, அனைவருக்கும் தடுப்பூசி விலையில்லாமல் விரைந்து செலுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சென்னையில் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தி 9 மாதங்கள் அதாவது 39 வாரங்களை கடந்த சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள் மற்றும் இணை நோயுடன் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி (பூஸ்டர்) செலுத்தும் பணியை தொடங்கி வைத்தார்.

இணை நோயுடன் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி செலுத்த மாநகராட்சியின் சார்பில் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இணை நோயுடன் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் 1913, 044–2538 4520 மற்றும் 044–4612 2300 ஆகிய எண்களில் தொடர்புகொண்டு தங்களுடைய விவரங்களை பதிவு செய்தால், அவர்களின் இல்லங்களுக்கே சென்று தடுப்பூசி செலுத்தப்படும். மேலும், 60 வயதை கடந்த முதல் தவணை தடுப்பூசி செலுத்தாத நபர்கள் மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசியை செலுத்த வேண்டிய நாட்களை கடந்த நபர்களும் இந்த எண்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்தால் அவர்களுக்கும் இல்லங்களிலேயே கொரோனா தடுப்பூசி செலுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.


பிற்சேர்க்கை IV
(விதி 8 (1) பார்க்கவும்)
**உடைமை அறிவிப்பு**
(அசையா சொத்துக்காக)

**அவ்வாறிருக்கையில்,**

கீழே கையொப்பமிடப்பட்டுள்ள **தனி லோன்ஸ் அண்ட் சர்வீசஸ் லிமிடெட் (இந்தியாபுல்ஸ் கன்ஸ்யூமர் ஃபைனான்ஸ் லிமிடெட்) (CIN:U74899DL1994PLC062407)** அங்கீகாரம் பெற்ற அதிகாரி செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்ஸியல் அசெட்ஸ் மற்றும் என்ஃபோர்ஸ்மென்ட் ஆஃப் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் ஆக்ட், சட்டம் 2002 கீழ் மற்றும் பிரிவு 13 (12) விதி 3, கீழ் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் என்ஃபோர்ஸ்மென்ட் விதி, 2002 உடன் வாசிக்கப்பட்டு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் நடைமுறைப்படி **18.06.2021** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு வழங்கியுள்ளது. அந்த அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 **நாட்களுக்குள்** உண்மையாக பணம் செலுத்தும் தேதி வரை கடன் ஆவணங்களின் விதிமுறைகளின்படி **29.05.2021-ம்** தேதியின்படி அதற்கான வட்டியுடன் கடன் கணக்கு எண்: **HILAVLC00428498** கொண்ட, அறிவிப்பில் குறிப்பிட்ட **ரூ.1,17,48,687/-(ரூபாய் ஒரு கோடியே பதினேழு லட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து அறுநூற்று எண்பத்தேழு மட்டும்)** தொகையினை கடனாளிகள் **பிரபாவதி டி., சகுந்தலா அலியாஸ் சகுந்தலா மற்றும் பக்தவச்சலம்** செலுத்த வேண்டும்.

கடனாளிகள் தொகையை திருப்பிச் செலுத்த தவறியதால் கடனாளி மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படும் அறிவிப்பு என்னவென்றால் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் (என்ஃபோர்ஸ்மென்ட்) விதிகள் 2002 சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் விதி 8 உடன் கீழே கையொப்பமிட்டவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் நடைமுறைப்படி **05.01.2022** அன்று கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் **அடையாள உடைமையை** எடுத்துக்கொண்டுள்ளார் என்பதாகும்.

கடன் பெற்றவரும், குறிப்பாக பொதுமக்களும் இந்தச் சொத்துடன் எந்த ஒப்பந்தமும் செய்யக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறது இந்தச் சொத்தை வாங்குபவர்கள் மற்றும் இந்தச் சொத்துடன் செய்யப்படும் ஏதாவது நடவடிக்கை, உண்மையாகப் பணம் செலுத்தும் தேதி வரை கடன் ஆவணங்களின் விதிமுறைகளின்படி **29.05.2021** தேதியின்படி அதற்கான வட்டியுடன் **ரூ. 1,17,48,687/-(ரூபாய் ஒரு கோடியே பதினேழு லட்சத்து நாற்பத்தெட்டு ஆயிரத்து அறுநூற்று எண்பத்தேழு மட்டும்)** **தனி லோன்ஸ் அண்ட் சர்வீசஸ் லிமிடெட்**-க்கு செலுத்த வேண்டும்.

[illegible]

**அசையாச் சொத்தின் விவரம்:**

[illegible]

**எல்லைகள்:**

[illegible]

தேதி: 05.01.2022
இடம்: சென்னை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
தனி லோன்ஸ் அண்ட் சர்வீசஸ் லிமிடெட்



படிவம் ஏ
பொது அறிவிப்பு
(நொடிந்த மற்றும் இந்திய திவால் நிலை வாரியம்
(கலைப்பு நடைமுறைகள்) விதிகள் 2016–ன் விதி 12)
**எம்பிஎல் ஆட்டோமொபைல்ஸ் ஏஜென்சி பிரைவேட் லிமிடெட் பங்குதாரர்களின் கவனத்திற்கு**

தொடர்புடைய விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1 | நிறுவன கடனாளர் பெயர் | எம்பிஎல் ஆட்டோமொபைல்ஸ் ஏஜென்சி பிரைவேட் லிமிடெட் |
| 2 | நிறுவன கடனாளர் இணைக்கப்பட்ட தேதி | 21/08/2003 |
| 3 | எந்த அதிகாரத்தின் கீழ் நிறுவன கடனாளர் இணைப்பு/பதிவு | நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் இணைக்கப்பட்டது மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தில் பதிவு செய்யப்பட்டது ஆர்ஓசி – சென்னை |
| 4 | நிறுவன கடனாளரின் நிறுவன அடையாள எண்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு அடையாள எண். | U34103TN2003PTC051429 |
| 5 | நிறுவன கடனாளரின் பதிவு அலுவலகம் மற்றும் முதன்மை அலுவலக முகவரி (வேறு ஏதேனும் இருப்பின்) | ஆர்ஓசி பதிவுகளின்படி பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: F1, அபுல் ரீஜென்சி, 1வது தளம், எண்.6, தெற்கு மாட தெரு, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை சென்னை தமிழ்நாடு 600015 இந்தியா |
| 6 | திவால் தீர்மான நடைமுறை மூடும் தேதி | 06/01/2022 |
| 7 | நிறுவன கடனாளரின் கலைப்பு துவங்கப்பட்ட தேதி | 07/01/2022 (மாண்பமை என்சிஎல்டி 07/01/2022 தேதியிட்ட கலைப்பு ஆணையை நிறைவேற்றியது) |
| 8 | கலைப்பாளராக செயல்படும் திவால் நிபுணரின் பெயர் மற்றும் பதிவு எண். | சி. பிரபாகரன் IBBI/IPA/-001/IP-P01596/2018-2019/12444 |
| 9 | குழுவில் பதிவு செய்துள்ளபடி கலைப்பாளரின் முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி: மனை எண் 9, கவி தோட்டம், எதிரில். சாவேரா பள்ளி, BU POST, சோமையம்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு– 641046 மின்னஞ்சல்: cpninsolvency@gmail.com |
| 10 | கலைப்பாளருடன் கடிதப் பரிமாற்றத்திற்கு பயன்படுத்த வேண்டிய முகவரி மற்றும் மின்னஞ்சல் | முகவரி: BKC மையம், 31E, லக்ஷ்மி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், நியூ லிங் சாலை, [illegible] |
| 11 | கோரிக்கைகளை சமர்ப்பிக்க கடைசி தேதி | 06.02.2022 |

[illegible]

தேதி: 07.01.2022
இடம்: சென்னை

சி. பிரபாகரன்
(எம்பிஎல் ஆட்டோமொபைல்ஸ் ஏஜென்சி பிரைவேட் லிமிடெட் கலைப்பாளர்)



**எம்ஆர்எஃப் லிமிடெட்**
CIN: L25111TN1960PLC004306
பதிவு அலுவலகம்: எண். 114, கிரீம்ஸ் ரோடு, சென்னை 600 006.
Tel: 044-28292777; Fax: 91-44-28295087
Email: mrfshare@mrfmail.com; Website: www.mrftyres.com

**சமபங்குதாரர்களுக்கு அறிவிப்பு**
**கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியின் (ஐஇபிஎப்) டீமேட் கணக்கிற்கு மாற்றுதல்**

[illegible]

இடம்: சென்னை
தேதி: 10.01.2022

எம்ஆர்எஃப் லிமிடெட்டுக்காக
S. தனவந்த்குமார்
கம்பெனி செயலாளர்



**PUBLIC NOTICE**

It is hereby notified to the public at large that the **Original Building Permit and Payment Receipt issued by the Greater Chennai Corporation in Reg No.CEBA/WDCN14/00113/2015, dated 20.05.2015, Sheet Nos.1 to 18, (1Set Original Plans and 3 sets True copy)**, have been irrecoverably lost and misplaced by my client **M/s. Ambojini Property Development Pvt Ltd**, represented **by Mr. ANIL KHICHA, Resolution Professional of the Corporate Debtor (M/s. Ambojini Property Development Pvt Ltd)**,having office at No.6-FF, First Floor, Golden Enclave, Poonamalle High Road Kilpauk, Chennai – 600 010.It is represented that the possession or custody of the original document was not transferred or handed over in favour of anyone for creating any interest of any nature.

If anyone has any claim, title, interest, right or demand relating to the said lost document/s or the said property by reason of being in possession of the above document or otherwise, he/she may contact the undersigned in writing within a period of SEVEN (7) days from the date of this publication failing which it will be presumed that no person has any charge, claim, demand, right, title or interest over the said document or the property. Any claims received beyond the notice period shall not be binding on the parties concerned.

If anyone has found the said original plans and true copies, please hand over the same immediately in person or by post to the undersigned.

**Mohan. K.**
Advocate
No.42/49, Nallan Street,
Vanniya Teynampet, Chennai - 18
Email: mohanadv18@gmail.com



**ONESOURCE IDEAS VENTURE LIMITED**

**Registered Office:** J.J. Manor, 2nd Floor, 146, Rukmani Lakshmipathy Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu, India.
**Tel:** +91 44 4213 4343; **Email:** cs@osivl.com; **Website:** www.osivl.com;
**CORPORATE INDENTITY NUMBER:** L74900TN1994PLC097983

Recommendations of the Committee of Independent Directors (**"IDC"**) of Onesource Ideas Venture Limited (**"Target Company"**) in relation to the open offer (**"Offer"**) made by Mr. Vibhu Maurya (**"Acquirer"**) to the public shareholders of the Target Company (**"Shareholders"**) under Regulation 3(1) and Regulation 4 of SEBI (Substantial Acquisition of Shares and Takeovers) Regulations, 2011, as amended (**"SEBI (SAST) Regulations"**).

| | | |
|---|---|---|
| 1. | Date | Monday, January 10, 2022 |
| 2. | Name of the Target Company | **Onesource Ideas Venture Limited** |
| 3 | Details of the Offer pertaining to Target Company | The Offer is being made by the Acquirer in terms of Regulation 3(1) and Regulation 4 of the SEBI (SAST) Regulations for acquisition of upto 8,00,000 (Eight Lacs) fully paid-up equity shares of face value of Rs.10 each ('Equity Shares'), representing upto 26.02% of the Voting Share Capital of the Target Company from the eligible Shareholders of the Target Company for cash at a price of Rs. 16.00 per Equity Share (the 'Offer') plus an Interest component of Rs. 7.54 ^ per Equity Share. *^ The interest amount shall however be payable to only those public shareholders who were holding shares in the Target Company when the previous open offer obligation had been triggered by Seller 2 (on May 27, 2017) and continue to remain as public shareholders till date.* |
| 4. | Name of the acquirer | **Acquirer**- Mr. Vibhu Maurya. There are no PAC(s) with the Acquirer for the purpose of Open Offer. |
| 5. | Name of the Manager to the offer | **Saffron Capital Advisors Private Limited** 605, Sixth Floor, Centre Point, J. B. Nagar, Andheri (East), Mumbai - 400 059. Maharashtra, India **Tel No:** +91 22 4082 0906, **Fax No:** +91 22 4082 0999 **Email:** openoffers@saffronadvisor.com; **Website:** www.saffronadvisor.com **Investor grievance:** investorgrievance@saffronadvisor.com **SEBI Registration Number:** INM 000011211 **SEBI Registration Validity:** Permanent; **Contact Person:** Varsha Gandhi |
| 6. | Members of the Committee of Independent Directors (IDC) | 1. Sankara Narayanan Sundaram, Chairman of IDC, Independent Director, DIN: 00975329. 2. Raji, Member of IDC, Independent Director, DIN: 07302320. Mr. Sankara Narayanan Sundaram is the Chairman of the Committee of Independent Directors ("IDC"). |
| 7. | IDC Member's relationship with the Target Company (Director, Equity shares owned, any other contract / relationship), if any | All the members of the IDC are directors of the Target Company. They do not hold any shares in Target Company. They do not have any contractual relationship with the Target Company |
| 8. | Trading in the Equity shares/other securities of the Target Company by IDC Members | None of the IDC Members have traded in the Equity Shares of Target Company during the last 12 months prior to the date of the Public Announcement of the Offer dated October 13, 2021. |
| 9 | IDC Member's relationship with the acquirer (Director, Equity shares owned, any other contract / relationship), if any. | None of the IDC Members have any other contract /relationship with the Acquirer. |
| 10. | Trading in the Equity shares/other securities of the acquirer by IDC Members | Not Applicable |
| 11. | Recommendation on the Open offer, as to whether the offer, is or is not, fair and reasonable | Based on the basis of PA, DPS, draft Letter of Offer (DLOF), and Letter of Offer (LOF), IDC is of the opinion that the offer is fair and reasonable. The shareholders may independently evaluate the offer price vis-à-vis market price and take an informed decision in the best of their interests |
| 12. | Summary of reasons for recommendation | IDC Members have reviewed: a) Public Announcement ("PA") dated October 13, 2021 b) Detailed Public Statement ("DPS") published on October 22, 2021 c) Draft Letter of Offer ("DLOF") dated October 29,2021 d) SEBI observation letter dated December 28, 2021 e) Letter of Offer ("LOF") dated January 01, 2022. Based on review of the above documents the members of the IDC are of the view that the Offer price is in line with the parameters prescribed by SEBI in the SEBI (SAST) Regulations. |
| 13. | Details of Independent Advisors, if any. | None |
| 14. | Disclosure of Voting Pattern of the meeting in which open offer proposal was discussed | The recommendations were unanimously approved by the members of the IDC. |
| 15. | Any other matter to be highlighted | None |

To the best of our knowledge and belief, after making proper enquiry, the information contained in or accompanying this statement is, in all material respect, true and correct and not misleading, whether by omission of any information or otherwise, and includes all the information required to be disclosed by the Target Company under the SEBI (SAST) Regulations.

**For and on behalf of the Committee of Independent Directors of Onesource Ideas Venture Limited**
**Sd/-**
**Sankara Narayanan Sundaram**
**Chairman of IDC**
**DIN: 00975329**

**Place: Chennai, Tamil Nadu**
**Date: January 10, 2022**